**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**

<u>முன்னிலை : திருமதி.R.சுஜாதா, B.Sc., L.L.M.,</u>

**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி</u>**

<u>2024ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 30ஆம் நாள் வெள்ளிக்கிழமை</u>

**<u>இ.ம.எண்.02/2021 இன் அ.வ.எண்.330/2021</u>**

கிணத்துக்கடவு தாலுக்கா, ஆண்டிபாளைம் கிராமம், வயது சுமார் 55 வருடங்கள், இந்து, பழனிச்சாமி மகன் பி.முத்துசாமி

... மனுவாதி / வாதி

/ எதிர் /

1. கோவை மாவட்டம், கிணத்துக்கடவு தாலுக்கா, ஆண்டிபாளையம் கிராமம், இந்து வயது சுமார் 60 வருடங்கள், வேலுச்சாமி மகன் Vமுத்துசாமி

2. கோவை மாவட்டம், கிணத்துக்கடவு தாலுக்கா, ஆண்டிபாளையம் கிராமம், இந்து வயது சுமார் 55 வருடங்கள், V.முத்துச்சாமியின் மனைவி லட்சுமி

3. கோவை மாவட்டம், கிணத்துக்கடவு தாலுக்கா, ஆண்டிபாளையம் கிராமம், இந்து வயது சுமார் 27 வருடங்கள், முத்துச்சாமி மகள் ராதாமணி

4. கோவை மாவட்டம், கிணத்துக்கடவு தாலுக்கா, ஆண்டிபாளையம் கிராமம், இந்து வயது சுமார் 25 வருடங்கள், முத்துச்சாமி மகள் அம்சவேணி

... எதிர்மனுவாதிகள்/ பிரதிவாதிகள்

தாவா சொத்தில் எதிர்மனுவாதியோ அல்லது அவர் உள்ளிட்ட ஆட்கள் வகையறா பேர்களோ மனுவாதி உரிமை பாத்தியத்திற்கு இடையூறும செய்யாமல் இருக்கும் பொருட்டு ஒரு இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரமும் இந்த மனு மீதான விசாரணை முடியும்வரை ஒரு தற்காலிக இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் நாள் : 29.11.2021.

இம்மனுவானது கடந்த 07.08.2024 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்

திரு.கே.பாலசுப்ரமணியன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.சுரேஷ் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின்படியும், ஆவணங்களின்படியும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும்.....

## இறுதி உத்தரவு

1.மமுடிவில், இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

2. செலவுத் தொகை இல்லை.

## சொத்து விபரம்

திருப்பூர் ரிடிடு நெகமம் ரிசப்டி, பொள்ளாச்சி வட்டம், ஆண்டிபாளையம் கிராமம் புலத்தில் க.ச.482.2 நெ. காலை ஹெக். ஏர் 0.31க்கு பு.ஏ.0.78, 1.52,

| | | |
|---|---|---|
| 482/8 நெ. காலைக்கு | .... | வடக்கு |
| கிழமேலாக போகும் பொது வண்டிப்பாதைக்கு | ..... | தெற்கு |
| 482/1 நெ. காலைக்கு | .... | கிழக்கு |
| 1 இலக்கமிட்ட பழனிச்சாமிகவுண்டர் பங்கு பூமிக்கு | ..... | மேற்கு |

இந்த மானாவரி சொத்தும்,

க.ச.482/7 நெ.காலை ஹெக். ஏர் 0.51க்கு பு.ஏ.1.27, 1.94

| | | |
|---|---|---|
| 482/5 நெ. காலைக்கு | .... | கிழக்கு |
| 482/4, 482/8 நெ. காலைகளுக்கு | ..... | தெற்கும் மேற்கும் |
| 484 நெ. காலைக்கு | ..... | வடக்கு |

இந்த சொத்தும்,

மேற்படி சொத்துக்கு 428/2, 482/8 நெ. காலைகளில் அதாவது 482 நெ. காலையில் வடகோட்டில் கிழமேலாகவும் பின் வடக்கேயிருந்து தெற்கேயும் 482/8 நெ. காலையில் வடக்கேயிலிருந்து நேர் தெற்கே வந்து காளியம்மன்

கோவிலுக்கு வடபுறம் நேர் மேற்கே மேற்படி சொத்துக்கு போகவர உள்ள தடபாத்தியமும்.

பின்னும் க.ச.484/1 நெ. காலை ஹெக்.ஏர் 0.34.5க்கு பு.ஏ.0.85, 1.92

| | | |
|---|---|---|
| 482 நெ. காலைக்கு | .... | தெற்கு |
| 484/2 நெ. காலைக்கு | ..... | வடக்கு |
| 60 நெ. காலைக்கு | ...... | கிழக்கு |
| 484/3, 484.4 நெ. காலைகளுக்கும் | ...... | மேற்கு |

இந்த சொத்தும்

பின்னும் க.ச.484/9 நெ. காலை ஹெக்.ஏர் 0.18.0க்கு பு.ஏ.0.44க்கு தீ.ரூ.0.01 இதிலுள்ள கிணர் 1லும் அதில் வைத்துள்ள 7.5 எச்.பி.இ.எம்.பி. செட் 1லும் மின் இணைப்பு எண்.11ம் பொதுவில் பிரிவினையில்லாமல் 6 ½ பங்கில் 1 பங்கு வீதாச்சாரப்படி இறவை பாத்தியங்களும் மாமூல்படி வாய்க்கால் பாத்தியமும் சகிதம் பு.ஏ.0.06 1/2, 0.14.

க.ச.484/11 நெ.காலையில் வடகோட்டில் கிழமேலாகவும் பின்னும் ஷை கிணற்றிலிருந்து நேர் வடக்கே 484/4, 484/7, 484/6, 484/4, 484/1 நெ. காலைகளிலும் வடகோட்டில் கிழமேலாக வந்து பின் வடக்கே போகும் பொது தடம்வழியாக போய்வரும் வழிநடை தடபாத்தியம் 484/9 நெ. காலையிலுள்ள து.கிணற்றிலிருந்து நேர் வடக்கே 481 நெ. காலை வடகோடு வரை பைப்லைன் 650 அடி நீளமுள்ள நிலத்தடக்குழாயில் பொதுவில் பிரிவினையில்லாமல் 6 ½ பங்கில் 1 பங்கும் ஷை வடகோட்டில் முடியும் பைப் லைனிலிருந்து நேர் மேற்கே 482/7 நெ. காலைக்கு வீதாச்சாரப்படி தண்ணீர் கொண்டு போய் பாய்த்துக் கொள்ளும் பாத்தியமும் ஷை பைப்லைன் வழியாக போய்வரும் தடபாத்தியமும் ஷை பைப் லைன் பழுது ஏற்படும் காலங்களில் பழுதுபார்த்துக் கொள்ளவும் புதுப்பித்துக் கொள்ளவும் உரிமையுண்டு. மேலும் 482/10 நெ. காலையில் வடகோட்டில் மேற்கே 481/9, 482/8 நெ. காலைகளை கடந்து 482/7 நெ. காலைக்கு தண்ணீர் பாய்த்துக் கொள்ள உரிமையுண்டு.

க.ச.484/7 நெ. காலை பு.ஏ.0.07ல் பொதுவில் சரிபாதி பு.ஏ.0.03 1/2.0.06

க.ச.481/3 நெ. காலை பு.ஏ.0.10ல் 1–8 பங்கு பு.ஏ.0.01 1,4,0.06

இதிலுள்ள விவசாய உபயோகத்திற்கு உதவாத சி.கிணர் 1ல் பொதுவில் 1–8 பங்கும் வீதாச்சாரப்படி உள்ள சகல பாத்தியமும் சகிதம்.

இவ்வுத்தரவு 2024ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 30ஆம் நாள் என் கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

ஒம்/............ஆர்.சுஜாதா
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

---------------------------------------------

**இறுதி உத்தரவு**

ஐ.ஏ.02/2021 இன் ஓ.எஸ்.330/2021
நாள்: 30.08.2024
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
பொள்ளாச்சி.

------------------------------------------